# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1837/1 - 2013 නොවැම්බර් මස 18 වැනි සඳුදා - 2013.11.18

1837/1 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*எனது இல.: KHDS/LND/04/ACQ/02*
*காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல.: எல்/டீ/05/2005/ஈ/506*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறாண காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறியத்தருகின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கஹவத்தை பிரதேச செயலாளர் பிரிவில், பன்னில்பத்துவை சிறு பிரிவில் மியனவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2013.07.29 ஆந் திகதிய இ.கி.வ. இல. 35 இல் துண்டு இல. 109 எனக் காட்டப்பட்ட 0.3330 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய தும்மலஹேன எனும் கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு:

1. **துண்டு இல.** 109

காணியின் பெயர்: தும்மலேஹேன; விபரம்: தேயிலைச் செய்கையும் கலப்புப் பயிர்ச் செய்கையும் காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: ஆர். ஏ. சோமரத்ன; விஸ்தீரணம்: 0.3330 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கஹவத்தை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ.ஏ.சீ.பீ. பமுனு ஆராச்சி
பிரதேச செயலாளர்,
கஹவத்தை.

பிரதேச செயலகம்,
கஹவத்தை,
2013, நவெம்பர் 15.

12 - 12

---

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இல.: KHDS/LND/04/ACQ/03*
*காணி அமைச்சு இல.: எல்/டீ/5/2001/பீ/சி/30*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்

**கவனிக்க.**- 1836/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி தொடரின் இறுதி இலக்கம்1836/41 ஆகும்.
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறாண காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறியத்தருகின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கஹ வத்தை பிரதேச செயலாளர் பிரிவில், பன்னில்பத்துவை சிறு பிரிவில் இல. கப்பெல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட அ.க.பி. 222வும், 2012.12.13 ஆம் திகதியின் ஆரம்ப கிராம வரைபட இல. 855 காட்டப்பட்ட சுமார் 4.3662 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகள்.

**1.துண்டு இல. 855**

நாகொட ஹேன; விடயம்-வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: ஏ.எம். அபேசிங்க பொடிநிலமே அவர்கள் 175, கப்பெல கஹவத்தை

2. பிக்கு குகுல்பிட்டிகம பஞ்சாலோக அவர்கள் ஸ்ரீ சுதர்சன தர்மசாலை, பெல்மடுல்ல. ஹெக்டயார்ஸ் 4.3662

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2014.01.13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கஹவத்தை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈட்டு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகை யையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014.01.10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதி களாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நட்டஈட்டு விசாரணையின் போது காணியுறுதி சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

பீ.ஏ.சீ.பீ. பமுனு ஆராச்சி
பிரதேச செயலாளர்,
கஹவத்தை.

பிரதேச செயலகம்,
கஹவத்தை.
2013, நவெம்பர் 15

12 - 13

---

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இலக்கம்: 03/04/05/01

பொது மக்கள் பணி நிமித்தம் தேவைப்படும், கீழே குறிப் பிடப்பட்டுள்ள காணியை சுவீகரித்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளமையினை, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்த) சட்டத்தின் திருத்தத்தின் படி காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள் கின்றேன்.

**பெற்றுக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில், பதியதலாவ பிரதேச செயலாளர் பிரிவில், பிம் தென்னபத்து தெற்கு, சிறு பகுதியில், பதியதலாவ கிராமத்தில் அமைந்துள்ள, அம்பாறை மாவட்டத்தின் சிரேஷ்ட நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 49, மேலதிக 47 பத்திர இலக்கம் 01 உடைய புவியமைப்பு ரீதியிலான ஆரம்ப வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள விஸ்தீர ணத்தில் 0.2212 ஹெக்டயார் ஆன விஸ்தீரணத்தையுடைய பஸ்கந்தவத்த என்றழைக்கப்படும் 02 காணித் துண்டுகள்.

1. துண்டு இலக்கம் 3436—பஸ்கந்தவத்த—விஸ்தீரணம்: - 0.1182 ஹெக்டயார்

வடக்கிற்கு: துண்டு இலக்கம் 1223 மற்றும் 3435; கிழக்கிற்கு: 3435; தெற்கிற்கு: துண்டு இலக்கம்: 3435,3438 மற்றும் 3437; மேற்கிற்கு :3437 மற்றும் 1223.

2. துண்டு இலக்கம் 3437 —பஸ்கந்தவத்த -விஸ்தீரணம்- 0.1030 ஹெக்டயார்
வடக்கிற்கு: துண்டு இலக்கம் 1223 மற்றும் 3436; கிழக்கிற்கு: 3436, 3438; தெற்கிற்கு: துண்டு இலக்கம்: 3438; மேற்கிற்கு :3438 மற்றும் 1223.

மேற்குறித்த காணிக்க உரித்துப்பேறகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013.12.02 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பதியதலாவை பிரதேச செயலகத்தில் என்முன்பாக தேரன்றல் வேண்டும்.

மேலும், 2013.12.02 ஆம் திகதிக்கு முன்னர் அக்காணி யில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/ஆட்சி உரிமையை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையம் இரண்டு பிரதிகளையுடைய எழுத்து மூல ஆவணத்தினுடாக எனக்கு அறிவிக்க வேண்டும்.

பிரதேச செயலாளர்,
பதியதலாவ - பிரிவு

பதியதலாவ பிரதேச செயலகம்
2013.11.07
12-14

---

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: ம/அபி/03/226.

2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 1718/17 ஆம் இலக்கங் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக்

குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 3810 இல் துண்டு இல. 250,253,254 ஆனது துண்டு இல. 335,336,337 எனவும் கீழ் வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தருகிறேன்.

துண்டு இல.335
காணியின் பெயர்:-;விபரம் பாதை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடிய வில்லை; விஸ்தீரணம்: 0.0521 ஹெக்டயார்.

துண்டு இல.336

காணியின் பெயர்:-;விபரம் பாதை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடிய வில்லை; விஸ்தீரணம்: 0.0110 ஹெக்டயார்.

துண்டு இல.337
காணியின் பெயர்:-;மில்லகஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், சுமார் 20-25 வருட வயதுள்ள 02 தென்னை மரங்கள், மலசலகூடம், நிரந்தரக் கட்டிடம் காணப்படு கின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கே. நிலன்திகா, இல. 173/25, ஆதுருப்பு வீதி, கொழும்பு 13; விஸ்தீரணம்: 0.0366 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக காணிகளுக்கு 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10 மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக் கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

தமரா டீ. பெரேரா,
பிரதேச செயலாளர்,
மஹர.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மஹர,
2013.11.14.

12-16

.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

2A - G 018548